**24.09.2025**

**அ.வ.எண். 4/2018**

**வா.சா.1 - கோவிந்தராஜ், த/பெ. ரங்கசாமி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 24.09.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் சொத்தை ராமசாமி, நடராஜ், சின்னசாமி ஆகியோரிடம் இருந்து பவர் ஆவணம் மூலமாக கிரயம் பெற்றேன். ராமசாமி, நடராஜ், சின்னசாமி ஆகியோர் பத்திர பதிவு அலுவலகம் வந்து பதிவு செய்து கொடுத்தனரா என்றால் ஆமாம். 1995 ம் வருடம் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்தனர், எந்த தேதி மாதம் என்று நினைவில்லை. நான் power loom வைத்துள்ளேன். வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் சென்னியாண்டவர் கோவில் அருகில், செகுடந்தாளி ரோட்டில் உள்ளது. சொத்தின் காலை எண்.485/11 ஆகும்.

2. மேற்படி சொத்து யாருடைய பெயரில் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் ராமசாமி பெயரில் இருந்தது. ராமசாமிக்கு மேற்படி சொத்து எப்படி வந்தது என்றால் ராமசாமியின் குடும்பத்தின் பூர்வீக சொத்து, அப்பா வழி சொத்து. அப்பா வழி சொத்து என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது, 1985 ம் வருட பாகப்பிரிவினை பத்திரம் உள்ளது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் அவர்களது குடும்பத்திற்குள்ஏற்பட்டது A அட்டவணை சொத்து 1. நஞ்சப்பன், 2. சென்னியப்பன், 3. சக்திவேல், 4. கனகாத்தாள் ஆகியோர்கள் பாகம் செய்து கொண்டதில் B பாக சொத்தாக ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டது.

3. மேற்படி பாகப்பிரிவினையானது 1979 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணம் மூலம் ஏற்பட்டது. 1979 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1979 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தை கொண்டு தான் 1985 ம் வருட A அட்டவணை மற்றும் B அட்டவணை சொத்தாக பாகம் பிரிக்கப்பட்டது. வா.சா.ஆ.3 கிரய பத்திர ஆவண எண் தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை வாங்கும்போது நான் வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றேனா என்றால் ஆமாம். அந்த கருத்துரையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4. ராமசாமி 16.05.1993 ல் இறந்துவிட்டார். அவர் திருமணத்திற்காக பத்திரிக்கை கொடுக்க செல்லும் போது இறந்துவிட்டார். அந்த பத்திரிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராமசாமியின் தகப்பனார் பெயர் நஞ்சப்பன். நஞ்சப்பனுக்கு இரண்டு மனைவிகள். ராமசாமி, மூத்த மனைவியின் மகன் ஆவார். மேற்படி ராமசாமி திருமணத்திற்கு முன்னதாகவே இறந்துவிட்டார். நஞ்சப்பனின் 2ம் மனைவிக்கு மூன்று வாரிசுகள். நஞ்சப்பன் எப்போது இறந்தார் என்றால் நினைவில்லை.

5. நஞ்சப்பனின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நஞ்சப்பனின் 2ம் மனைவியின் வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினர்களா என்றால் ஆமாம். ராமாத்தாளிடம் இருந்து நாங்கள் சொத்தை கிரயம் வாங்கவில்லை என்றால் சரிதான். நடராஜ், சின்னசாமி, ராமசாமியிடம் இருந்து கிரயம் பெற்றேன். கிரய பத்திரத்தில் ராமாத்தாள் கையொப்பம் செய்யவில்லை. நடராஜ், சின்னசாமி, ராமசாமி ஆகியோர் கையொப்பம் செய்தனர். பொது அதிகார ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பொது அதிகார ஆவணத்தின் தேதி, மாதம் நினைவில்லை, 1995 ம் வருடம் எழுதப்பட்டது.

6. மேற்படி வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணம் முறைப்படி எழுதப்பட்டது. மேற்படி பொது அதிகார ஆவணத்தில் மாதம் எழுதப்படவில்லை என்றால் அது பொய். மேற்படி பொது அதிகார ஆவணத்தில் மாதம் எழுதப்பட்டுள்ளது என சொல்வது பொய் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தின் ஆவண எண் தெரியாது. பொது அதிகார ஆவணம் எந்த தேதி, மாதம் எழுதப்பட்டது என குறிப்பிடாமல் இருந்தால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தில் மாதம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. பொதுவாக, பொது அதிகார ஆவணத்தில் தேதியோ, மாதமோ குறிப்பிடாமல் இருந்தால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் மற்றொரு ஆவணம் ஏற்படுத்த இயலாது என்றால் சரியல்ல. சொத்தை என்ன விலைக்கு கிரயம் பெற்றேன் என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில் ராமாத்தாளிடம் கிரயம் பெற்றதாக உள்ளது என்றால் இல்லை. ஒரு நபர் திருமணம் ஆகாமல்

இறந்துவிட்டால் அவரது சொத்து அவரது தாய்க்கு தான் சேரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரய பத்திரம் பதிவு செய்யும்போது ராமாத்தாளின் கணவர் தலையிட்டாரா என்றால் இல்லை. ராமாத்தாள் உயிருடன் இருந்தபோது நஞ்சப்பன் 2 வதாக பாப்பாத்தி என்பவரை திருமணம் செய்து கொண்டாரா என்றால் ஆமாம். அந்த விவரம் எனக்கு தெரியும். நான் கிரயம் பெற்ற சொத்தின் சுவாதீனத்தில் யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை, காலியாக தான் இருந்தது.

8. தற்போது யார் குடியிருக்கிறார்கள் என்றால் யாரும் இல்லை, குடிசை மட்டும் தான் உள்ளது, விவசாய பூமி என்றால் தரிசாக உள்ளது. குடிசை வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் நீதிமன்ற ஆணையர் வந்து பார்த்த பின்னிட்டு மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். சொத்தை அளந்து கிரயம் பெற்றேனா என்றால் ஆமாம்.

**1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur